**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர்.**

**முன்னிலை : திரு.ஆர்.புவனேஷ்குமார் B.A., L.L.B (Hons), L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**கடலூர்.**

2026– ம் ஆண்டு ஜூலை மாதம் 27–ஆம் நாள்
திருவள்ளுவராண்டு 2054 சோபகிருது வருடம் ஆடி 11–ம் நாள்

CNR. No.**TNCD06-015169-2025**

ஆண்டுபட்டிகை **வழக்கு எண்.919/2025**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்
கடலூர் மதுவிலக்கு அமல் பிரிவு
குற்ற எண்.326/2025 ... குற்றமுறையிடுபவர்

-- எதிர் --

பாபு த.பெ சுந்தரமூர்த்தி ... எதிரி

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட **R.O.C.No.** 814/2020/**RG/F**1 (**P.Dis.No.** 36/2021) உத்தரவு மற்றும் **Rule** 106 **Cr.R.P.**–ன்படி

## CASE SUMMARY

| | | | |
|---|---|---|---|
| i) The Period of Remand of the Accused: | Date of Remand | Date of surrender | Released on Bail |
| | 02.05.2025 | -- | 13.06.2025 |
| ii) Date of filing of the Complaint / Final report in the Court | Filing of complaint | Filing of Final Report | |
| | – | 13.06.2025 | |
| iii) The date of questioning of the Accused U/s.263 of | 10.10.2025 | | |

| | | | |
|---|---|---|---|
| the Bharatiya Nagarik Saraksha Sanhita, 2023 | | | |
| v) Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 355 of BNSS | Crl.M.P.No. | Date of Filing | Result |
| | -- | -- | -- |
| v) Date of examination in-chief and cross-examination of a witness | Name of the Witness | Date of Chief | Date of Cross |
| | 1.திரு.சிலம்பரசன் தலைமை காவலர் | 04.07.2026 | 04.07.2026 |
| | 2.திரு.ராஜேஷ் தலைமை காவலர் | 04.07.2026 | 04.06.2026 |
| | 3.திரு.வெங்கடேசன், தலைமை ஆய்வாளர் | 04.07.2026 | 04.07.2026 |
| | 4.திரு.பாலாஜி தலைமை ஆய்வாளர் | 20.07.2026 | 20.07.2026 |
| vi) Date of examination of the Accused U/s.313(1)(b) Cr.P.C. | 21.07.2026 | | |
| vii) Details of abscondance of an Accused and his appearance / production, as the case may be; and | Nil | | |
| viii) Grant of stay by | Nil | | |

| | |
|---|---|
| sup1erior Courts and the results there of: | |

Particulars u/s.106 of Criminal Rules of Practice, 2019 (Form 61)

| | | |
|---|---|---|
| 1 | Name of the police station and crime number of the offence | Cuddalore PE-Wing P.S<br>Cr.No: 326/2025 |
| 2 | Description of the accused:<br>Name: Father's name:<br>Occupation: Residence: Age: | Babu S/o Sundaramoorthy<br><br>Neyveli, Cuddalore. |
| 3 | Date of occurrence | 02.05.2025 |
| 4 | Date of Complaint | - |
| 5 | Date of Apprehension | 02.05.2025 |
| 6 | Date of Release of Bail | 02.05.2025 |
| 7 | Date of Commitment | Not applicable |
| 8 | Date of Commencement of trial | 04.07.2026 |
| 9 | Date of Closure of Trial | 20.07.2026 |
| 10 | Date of Sentence or Order | 27.07.2026 |
| 11 | Date of service of copy of judgment or finding on accused | Not applicable, since acquittal |
| 12 | Explanation of delay | No delay |

இவ்வழக்கானது 24.07.2025-ந் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 27.07.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் திரு.M.யோகேஷ் B.Com., B.L., (Hons), L.L.M., அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை.II அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர்கள்

திரு.பொன்மணிகண்டன், திரு.K.லெனின் B.A., B.L., ஆகியோர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**2) அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :-**

கடந்த 02.05.2025 ந் தேதி 16.00 மணிக்கு கடலூர் ஆல்பேட்டை சோதனை சாவடி அருகில் மதுவிலக்கு அமல்பிரிவு ஆய்வாளர் போலிஸ் பார்ட்டி சகிதம் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, எதிரி TN-31-CQ-5409 என்ற பதிவெண்கொண்ட Toyota Glanza காரில் வைத்து தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புதுவை மாநில மதுபானபாட்டில்களை 1) 180 ml அளவுள்ள Courrier Napoleon Brandy – 18 Nos,, 2) 180 ML அளவுள்ள Biscuit Brandy -32 No's மதுபாட்டில்கள் மதுபானத்துடன் விற்பனை செய்வதற்காக வாகனத்தில் வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார் என்று எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) 4 (1) (A) of TNP Amendment Act-ன் கீழ் கடலூர் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3)** வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு Sec.230 of BNSS--ன்படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4) குற்றச்சாட்டு :-**

எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு எதிரியிடம் அவருடைய குற்றம் குறித்து வினவியபோது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்தார். எதிரி தன் குற்றத்தை மறுக்கவே வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு போதுமான ஆதாரம் இருப்பதாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) 4 (1) (A) of TNP Amendment Act-ன் கீழ், குற்றச்சாட்டு வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி அல்ல என்று கூறினர்.

**5)** இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 5 வரையான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு,

அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ 10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சா.பொ.1 மற்றும் சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

**அ) அசா.1/சிலம்பரசன் தலைமை காவலர் / கைப்பற்றுதல் மகசர் சாட்சி,** தனது முதன்மை சாட்சியத்தில், தற்போது கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், வழக்கு சமயத்தில் பண்ருட்டி மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்ததாகவும், தானும், தன்னுடன் காவல் கட்டுப்பாட்டு அறையில் தலைமை காவலராக இருந்த HC 1269 திரு,ராஜேஷ் என்பவரும் மற்றும் கடலூர் மதுவிலக்கு பிரிவு காவல ஆயவாளர் திரு.பாலஜி என்பவரும் கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட் அருகே கடந்த 02.05.2025 அன்று மாலை 16.00 மணியளவில் மதுவிலக்கு சம்மந்தமாக சோதனையில் இருந்த போது அந்த வழியாக கையில் கட்டப்பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவரை விசாரித்த போது முன்னுக்குப் பின் முரணாக பேசியனார். பிறகு அவர் தனது பெயர் பாபு (54) த.பெ சுந்தரமூர்த்தி கணபதி நகர், 2 வது தெரு, கங்கைகொண்டான் நெய்வேலி என்று சொன்னார். பிறகு கட்டப்பையை சோதனை செய்த போது கட்டப்பையில் 1) 180 ml நெப்போலியன் கொரியர் பிரண்டி - 18 Nos 2) 180ml பிஸ்கட் பிராண்டி -32 Nos இருந்தது என்றும், அவர் கொண்டு வந்த புதுவை மாநில மதுபானங்கள் தமிழக அரசால் தடைசெய்யப்பட்டவை என்பதனால் எவ்வித உரிமமும் அரசு அனுமதியும் இன்றி எடுத்து வந்து அதை தமிழ் நாட்டில் அதிக விலைக்கு விற்பதற்காக கொண்டு வந்ததாக அவர் கூறினார் என்றும், பின்பு உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றியும் எதிரியை தக்க காரணம் கூறி 16.15 மணிக்கு கைது செய்தும், அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றும், பொதுமக்கள் யாரும் முன்வரததால் மகஜர் சாட்சிகளாக நானும் HC 1269 திரு.ராஜேஷ் என்பவர் முன்னிலையில் 16.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் சாட்சியாக இருந்து கையொப்பம் இட்டதாகவும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையது தான் என்றும், கடலூர் மதுவிலக்கு அமல்பிரிவிற்க்கு 17.00 மணிக்கு நிலையம் எதிரியை அழைத்து வந்து நிலைய குற்ற எண் 326/2025 ச/பி 4(1)

(A) , 4(1)(C ) of TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய நானும் HC 1269 திரு.ராஜேஷ் என்பவரும் ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**ஆ) அசா.2/ராஜேஷ், தலைமை காவலர் /மற்றொரு கைப்பற்றுதல் மகசர் சாட்சி,** தனது முதன்மை சாட்சியத்தில், தற்போது கடலூர் மங்களம் பட்டு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், வழக்கு சமயத்தில் கடலூர் காவல் கட்டுப்பாட்டு அறையில் தலைமை காவலராக பணிபுரிந்ததாகவும், தானும் தன்னுடன் பண்ருட்டி மதுவிலக்கு அமல்பிரிவு தலைமை காவலராக இருந்த HC 2004 திரு.சிலம்பரசன் என்பவரும் மற்றும் கடலூர் மதுவிலக்கு பிரிவு காவல் ஆயவாளர் திரு.பாலஜி என்பவரும் கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட் அருகே கடந்த 02.05.2025 அன்று மாலை 16.00 மணியளவில் மதுவிலக்கு சம்மந்தமாக சோதனையில் இருந்த போது அந்த வழியாக கையில் கட்டப்பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவரை விசாரித்த போது முன்னுக்குப் பின் முரணாக பேசியனார் என்றும், பிறகு அவர் தனது பெயர் பாபு (54) த.பெ சுந்தரமூர்த்தி கணபதி நகர், 2 வது தெரு, கங்கைகொண்டான் நெய்வேலி என்று சொன்னார் என்றும், பிறகு கட்டப்பையை சோதனை செய்த போது கட்டப்பையில் 1) 180 ml நெப்போலியன் கொரியர் பிரண்டி - 18 Nos 2) 180ml பிஸ்கட் பிராண்டி -32 Nos இருந்தது. அவர் கொண்டு வந்த புதுவை மாநில மதுபானங்கள் தமிழக அரசால் தடைசெய்யப்பட்டவை என்பதனால் எவ்வவித உரிமமும் அரசு அனுமதியும் இன்றி எடுத்து வந்து அதை தமிழ் நாட்டில் அதிக விலைக்கு விற்பதற்காக கொண்டு வந்ததாக அவர் கூறினார் என்றும், பின்பு உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றியும் எதிரியை தக்க காரணம் கூறி 16.15 மணிக்கு கைது செய்தும், அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றும், பொதுமக்கள் யாரும் முன்வரததால் மகஜர் சாட்சிகளாக தானும், HC 2004 திரு.சிலம்பரசன் என்பவர் முன்னிலையில் 16.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார், அந்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், சாட்சியாக இருந்து கையொப்பம் இட்டதாகவும், தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.2 தன்னுடையது தான் என்றும், கடலூர் மதுவிலக்கு அமல்பிரிவிற்க்கு 17.00 மணிக்கு நிலையம் எதிரியை அழைத்து வந்து நிலைய குற்ற எண் 326/2025 ச/பி 4(1) (A) , 4(1)(C ) of TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய தானும், HC 2004 திரு.சிலம்பரசன் என்பவரும் ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், சாட்சியமளித்துள்ளார்.

**இ) அசா.3/வெங்கடேசன், தலைமை காவலர் /மற்றொரு கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சி,** தனது முதன்மை சாட்சியத்தில் தற்போது புதுநகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், வழக்கு சமயத்தில் கடலூர் மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்ததாகவும், கடந்த 02.05.2025 ம் வருடம் 21.00 மணிக்கு கடலூர் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, பாபு த.பெ சுந்தரமூர்த்தி எண்.11, 2 வது தெரு, கணபதி நகர், கங்கைகொண்டான் நெய்வேலி என்பவரை ஆல்பேட்டை மதுவிலக்கு சோதனை சாவடியில் இருந்து தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புதுச்சேரி மதுபானங்களை எடுத்து வந்த காரணத்தினால் கைது செய்து கடலூர் மதுவிலக்கு அமல்பிரிவு குற்ற எண் 326/2025 ச.பி 4(1)(A), 4(1)(C ) of TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார்கள் என்றும், பின்னர் எதிரி எந்தவித அச்சுருத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல் ஆய்வாளர் திரு.பாலாஜி என்பவர் பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராத காரணத்தினால் தன்னையும் தலைமை காவலர் HC 182 திரு.நவமணி என்பவரையும் சாட்சியா இருக்க கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததற்க்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.3** தன்னுடையது தான் என்றும், அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் மதுபானங்களை கொண்டு வர பயன்படுத்திய TN-31-CQ-5409 டொயோட்டா glanza என்ற வாகனத்தை அவரை அழைத்து சென்றால் அடையாளம் காட்டுவதாக கூறினார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 4 என்றும், அந்த வாகனத்தை அன்றைய தினமே 21.30 மணிக்கு மகஜரில் கைப்பற்றுவதற்க்கு காவல் ஆய்வாளர் தயார் செய்த கைப்பறறுதல் மகஜரில் நானும் தலைமை காவலர் 182 திரு.நவமணி என்பரும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.5 தன்னுடையது தான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**ஈ) அசா.4/பாலாஜி, ஆய்வாளர்/** தனது முதன்மை சாட்சியத்தில், தற்போது விழுப்புரம் மாவட்டம், மயிலம் காவல் நிலையத்தில காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், வழக்கு சமயத்தில் கடலூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்ததாகவும், கடந்த 02.05.2025 ந்தேதி 16.00 மணிக்கு கடலூர் ஆல்பேட்டை

சோதனை சாவடி அருகே பன்ருட்டி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு தலைமை காவலர் காவலர் சிலம்பரசன் மற்றும் காவல் கட்டுப்பாட்டுஅறை தலைமை காவலர் ராஜேஷ் ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக கண்காணித்துக்கொண்டிருந்த போது, கையில் கருப்பு நிற பிளாஸ்டிக் பையுடன் நடந்து வந்து கொண்டிருந்த தங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் பாபு த.பெ சுந்தரமூர்த்தி, கணபதி நகர், கங்கைகொண்டான், நெய்வேலி என்று கூறினார். பின்னர் அவர் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்த போது அதில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புதுவை மாநில மதுபாட்டில்கள் 180 ml அளவுள்ள courrier nepoleon Brandy-18, 180 ml அளவுள்ள biscuit Brandy – 32, ஆகிய மதுபாட்டில்களை மதுபானத்துடன் வைத்திருந்தது தெரியவந்தது என்றும், அரசு அனுமதியும் உரிமமோ வைத்துள்ளீரகளா என்று கேட்ட போது எவ்வித அரசு அனுமதியும் உரிமமும் இல்லை எனறு கூறியவரை புதுவை மாநில மதுபாட்டில்களை வைத்திருந்த குற்றத்திற்காக காரணம் கூறி உச்ச நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி 16.15 மணிக்கு கைது செய்து மேற்படி மதுபாட்டில்களை அன்னிய சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் ஆஜரில் இருந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் 16.30 மணிக்கு மகஜரில் கைப்பற்றி காவலர்களிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்று பின்னர் எதிரி மற்றும் தடயம் சகிதம் காவல் நிலையம் 17.00 மணிக்கு வந்து எதிரி மீது குற்ற எண் 326/2025 பிரிவு 4(1)(C ) 4(1)(A) of TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் மகஜரின் அசல், கைப்பற்றிய தடயங்கள் ஆகியவற்றை கடலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு நீதிமன்ற காவலர்கள் மூலம் அனுப்பி வைத்ததாகவும், பின்னர் நீதிமன்ற காவலில் அனுப்புவதற்காக மருத்துவமனை சென்று சோதனை செய்த போது அவர் நீதிமன்ற காவலுக்கு medically unfit என்று சான்று அளிக்கப்பட்டதால் எதிரியை தக்க இரு நபர் ஜாமீனில் விடுவிக்கும் போது ஜெய் சங்கர் மற்றும் பாபு அவர்களிடம் காரில் தான் மதுபானம் கடத்தி வந்ததாக பேசிக்கொண்டதை கேட்டு எதிரியிடம் விசாரணை செய்ததில் எதிரி எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திற்க்கு சாட்சியாக தலைமை காவலர் வெங்கடேசன் மற்றும் தலைமை காவலர் நவமணி ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதில் எதிரி புதுச்சேரியில் இருந்து மதுபானத்தை TN-31-CQ-5409 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் எடுத்து வந்து வாகனம் மாட்டிக்கொள்ளும் என்பதால் வாகனத்தை ஆல்பேட்டை சோதனை சாவடிக்கு முன்பே புதரில் வைத்து விட்டு வாகனத்தை ஆல்பேட்டை

சோதனை சாவடி தாண்டி வந்து வாகனத்தை விட்டு விட்டு மீண்டும் மறைத்து வைத்த பகுதியில் இருந்த மதுபானத்தை எடுத்து வரும் போது போலிசார் ஆகிய தங்கள் பிடித்துக்கொண்டீர்கள் என நண்பர்களிடம் பேசிக்கொண்டதை கேட்டு விசாரனை செய்தீர்கள் நடந்ததை சொன்னதாகவும், தன்னை அழைத்து சென்றால் மறைத்து வைத்திருந்த வாகனத்தை அடையாளம் காட்டுவேன் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் அடையாளம் காட்டிய காரை சாட்சிகள் தலைமை காவலர் வெங்கடேசன் மற்றும் தலைமை காவலர் நவமணி ஆகியோர் முன்னிலையில் 21.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது என்றும், குற்ற பிரிவு 4(1)(C ) 4(1)(A) of TNP Act ல் இருந்து 4(1)(C )4(1)(A), 14A of TNP Act ன் படி பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை தாக்கல் செய்ததாகவும், பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் -91 ன் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், பின்னர் வழக்கு விசாரணையை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் -1 மற்றும் கைப்பற்றுதல் மகஜர் -2, பிரிவு மாற்றல் அறிக்கை மற்றும் படிவம் -91 முறையே அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8, அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 என்றும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளான மதுபாட்டில்கள் சா.பொ 1 என்றும், மற்றும் கைப்பற்றப்பட்ட வாகனத்தின் புகைப்படங்கள் சா.பொ2 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

07) இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

08) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து 351(1)(b) of BNSS–ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

### 09) விவாதம்:–

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

10) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கின் அ.சா.1, முதல் அ.சா.4 காவல்துறையை சார்ந்த சாட்சிகள் என்றும் இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை, எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் கருப்பு நிற பையை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்தாக தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே அரசுத் தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படவில்லை. சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**11) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

**12)** இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**13)** அ.சா.1 மற்றும் அசா.2 **பத்தி- அ மற்றும் பத்தி-ஆ** -வில் உள்ளவாறு தனது முதன்மை விசாரணையில் கூறியுள்ளார். **மேலும் அ.சா.1 மற்றும் அசா.2 தங்களது குறுக்கு விசாரணையில் " சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடி போக்குவரத்து மிகுந்த பகுதி என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடி பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி தான் என்று சொன்னால் சரிதான். எதிரியை நாங்கள் சோதனை செய்ததாக சொல்லப்படும் சமயத்தில் பொதுமக்கள் அங்கு நின்று வேடிக்கை பார்த்தனர். அங்கு நின்று கொண்டிருந்த 4 பொதுமக்களை காவல் ஆய்வாளர் விசாரித்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடியில் கடலூர் சாலையை நோக்கியும், புதுவை சாலையை நோக்கியும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த கண்காணிப்பு கேமராவின் பதிவேடுகளை ஆய்வாளர் பார்த்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த கைப்பற்றுதல் மகஜரில் எதிரி கொண்டு வந்ததாக சொல்லப்படும் கட்டப்பையின் விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான் என்று கூறியுள்ளார்.**

**14)** அ.சா.3 **பத்தி இ** –வில் உள்ளவாறு தனது முதன்மை விசாரணையில் கூறியுள்ளார். **மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் " ஒப்புதல் வாக்குமூலம் பொதுவாக சம்பவம் நடந்த இடத்தில் தான் எதிரியிடம் இருந்து பெறவேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தான் எதிரியிடம் இருந்து பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த போக்குவரத்து சோதனை சாவடியில் கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த போக்குவரத்து சோதனை சாவடியின் கண்காணிப்பு கேமிரா பதிவேட்டுகளை ஆய்வாளர் பார்த்தாரா என்றால் இல்லை** என்று கூறியுள்ளார் .

15) புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் அ.சா.4 பத்தி –ஈ ல் உள்ளவாறு சாட்சியமளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில்

16) மேலும் அ.சா.4 குறுக்கு விசாரணையில் " **பொதுவாக ஆல்பேட்டை செக்போஸ்ட் என்பது மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி தான் என்று சொன்னால் சரிதான். எதிரி மதுபாட்டில்களை கொண்டு வந்ததாக சொல்லப்படும் கருப்பு நிற பையை வழக்க சொத்தாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் கருப்பு நிற பையை வழக்கு சொத்தாக நான் கைப்பற்றவில்லை. இந்த வழக்கில் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சேர்க்கவில்லை என்று சொன்னால் பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்பதால் சேர்க்கவில்லை. கைப்பற்றப்பட்ட சொத்துகள் இரண்டுமே ஒரே இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் நீங்களே புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரி என்று சொன்னால் சரிதான்." என்றும் கூறியுள்ளார்.**

17) மேற்கண்ட சாட்சிங்களை கண்ணுறும்போது எதிரி மீதான சட்டப்பிரிவு 4(1)(C) 4 (1) (A) & 14 A of TNP Amendment Act–ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படுள்ளதா என்று பார்க்கும்பொழுது,

**18)** இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் சம்பவயிடத்தில் ரோந்து பணியில் இருந்ததாக அரசுத்தரப்பில் சொல்லியுள்ள பட்சத்தில், தங்களது முதன்மை சாட்சியத்தில் **"எதிரி கட்டைப்பையுடன் நடந்து வந்துகொண்டிருந்தார் என்று**

சொல்லியுள்ளார்கள். ஆனால் அசா.4 உதவி ஆய்வாளர் தனது முதன்மை விசாரணையில் எதிரி கருப்பு நிற பிளாஸ்டிக் பையுடன் நடந்து வந்துகொண்டிருந்தார் என்று சொல்லியுள்ளார். சம்பவ இடத்தில் அசா.1, அசா.2 மற்றும் அசா.4 ஆகியோர்கள் இருந்ததாக கூறப்படும் நிலையில் மூவரும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளது இந்நீதிமன்றத்திற்கு அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் அசா.1 மற்றும் அசா.2 தங்களது குறுக்கு விசாரணையில் "நாங்கள் கையொப்பம் செய்த கைப்பற்றுதல் மகஜரில் எதிரி கொண்டு வந்ததாக சொல்லப்படும் கட்டப்பையின் விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான் என்று கூறியுள்ளது உண்மையில் வழக்கு சொத்து எதிரி வைத்திருந்த கட்டைப்பையா பையா? அல்லது கருப்பு நிற பிளாஸ்டிக் பையா? என்பது குறித்தும், மேற்படி பையின் உள்ளே இருந்து கைப்பற்றப்பட்டது என்று கூறியுள்ள பட்சத்தில் ஏன் அந்த கட்டை பையை ஆய்வாளர் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறித்து நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

19) அதுமட்டுமின்றி அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் தங்களது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடி போக்குவரத்து மிகுந்த பகுதி என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடி பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி தான் என்று சொன்னால் சரிதான் என்று கூறியுள்ள இச்சூழ்நிலையில் ஏன் பொதுமக்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை, தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சொத்து கைப்பற்றபடவில்லை. உண்மையிலேயே பொதுமக்கள் நிறைந்த இடத்தில் இருந்து சா.பொ.1 கைப்பற்றப்பட்டது என்றால், ஆய்வாளர் தனிநபர் யரேனும் விசாரித்து அவர்களை சாட்சியாக இவ்வழக்கில் சேர்த்திருப்பார். ஆனால் இவ்வழக்கில் தனிநபர் சாட்சியாக யாரையும் சேர்க்கவில்லை என்பது அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வண்ணம் உள்ளது.

20) அதுமட்டுமின்றி அசா.1 முதல் அசா.3 தங்களது குறுக்கு விசாரணையில் "சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடியில் கடலூர் சாலையை நோக்கியும், புதுவை சாலையை நோக்கியும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்" என்று கூறியுள்ள சூழ்நிலையில் விசாரணை அதிகாரி மேற்படி கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து அதன்

**பதிவுகளை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பது குறித்தும் இந்நீதிமன்றத்திற்கு அரசு தரப்பு வழக்கின் மீது பல சந்தேகங்கள் எழும்புகிறது.**

21) ஒப்புதல் வாக்குமூலம் சாட்சி அசா.3 தனது சாட்சியத்தில் எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்று கூறியுள்ளார் மேலும் பின்னர் எதிரி எந்தவித அச்சுருத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல் ஆய்வாளர் திரு.பாலாஜி என்பவர் பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராத காரணத்தினால் தன்னையும் தலைமை காவலர் HC 182 திரு.நவமணி என்பவரையும் சாட்சியா இருக்க கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததற்க்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். **அசா.3 தனது குறுக்கு விசாரணையில் " ஒப்புதல் வாக்குமூலம் பொதுவாக சம்பவம் நடந்த இடத்தில் தான் எதிரியிடம் இருந்து பெறவேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தான் எதிரியிடம் இருந்து பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான்" என்று கூறியுள்ளார். மேலும் ஒப்புதல் வாக்குமூலத்தை கவனிக்கும்போது, எதிரியை விசாரித்தபின் எதிரி தன்னிச்சயைாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருப்பதாக தெரியவருகிறது. எனவே இவ்வழக்கில் எதிரி அளித்த ஒப்புதல் வாக்கமூலத்தின் தொடர்ச்சியாக எவ்வித பொருண்மையும் கண்டறியப்படவில்லை.** ***எனவே எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 27-ன் கீழ் ஏற்கத்தகுந்ததாக இல்லை என்று என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.***

22) மேலும் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் "**எதிரி TN-31-CQ-5409 என்ற பதிவெண்கொண்ட Toyota Glanza** காரில் வைத்து தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புதுவை மாநில மதுபானபாட்டில்களை 1) 180 **ml** அளவுள்ள **Courrier Napoleon Brandy** – 18 **Nos**,, 2) 180 **ML** அளவுள்ள **Biscuit Brandy** -32 **No's** மதுபாட்டில்கள் **மதுபானத்துடன் விற்பனை செய்வதற்காக வாகனத்தில் வைத்திருந்தார் என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து குற்ற இறுதி தாக்கல் செய்துள்ளார். ஆனால் இவ்வழக்கில் சாட்சிகள் அசா.1 முதல் அசா.4 வரையானவர்கள் தங்களது நீதிமன்ற முதன்மை சாட்சியத்தில் எதிரி கையில் கருப்பு நிற பிளாஸ்டிக் பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தார் என்று சாட்சியமளித்திருப்பது,** அசா.4 புலன் விசாரணை அதிகாரி எதிரி

மீது பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை ஊர்ஜிதம் செய்யும் வகையில் சாட்சியமளிக்காமல் அதற்கு மாறாக அளித்திருப்பது உண்மையில் எதிரி வழக்கு சொத்தை வாகனத்தில் கடத்தி வந்தாரா அல்லது கட்டைப்பையில் வைத்து நடந்து வந்து கொண்டிருந்தாரா என்பது குறித்து அரசு தரப்பு வழக்கின் மீது இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும்புகிறது.

**23)** இவ்வழக்கில் எந்த இடத்தில் மேற்படி சம்பவம் நடந்தது என்று காண்பிப்பதற்கு மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகசர் எதுவும் விசாரணை அதிகாரியால் தயார் செய்யப்படவில்லை. அதற்கான காரணத்தை அரசுதரப்பில் கூறவில்லை.

**24)** இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை அ.சா.4 காவல் ஆய்வாளர்தான் பதிந்துள்ளார். அவரே இவ்வழக்கின் புலன் விசாரணையையும் மேற்கொண்டுள்ளார். புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கையையும் அவரே தாக்கல் செய்திருக்கிறார். ஆக அவர் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக அவர் புலன் விசாரணையும் செய்து அதற்கு ஆதரவாக இறுதி அறிக்கையையும் தாக்கல செய்திருப்பது அரசு தரப்பு வழக்கை பாதிப்புக்கு உள்ளாக்கி இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**25)** மேற்சொன்ன சூழ்நிலைகளை கருத்தில்கொண்டு பரிசீலிக்கின்றபோது, வழக்கு சொத்தை தனிநபர் சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றாததும், அ.சா.4 காவல் ஆய்வாளரே முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு, இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கின்ற நிலையிலும், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் காவல் துறையை சார்ந்தவர்கள் என்ற நிலையிலும், தனிநபர் சாட்சிகள் விசாரணை செய்யப்படாத நிலையிலும், அரசு தரப்பு வழக்கில் பெருத்த சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**26)** முடிவில், அரசு தரப்பில் எதிரி மீதானக் குற்றச்சாட்டு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாகவும், சான்றாவணங்கள் மூலமாகவும் சந்தேகமற நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு கண்டு இவ்வழக்கின் எதிரியை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 4(1)(C) 4 (1) (A) & 14 A of TNP Amendment Act பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**27)** இவ்வழக்கில் எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

**28)** இவ்வழக்கு சொத்தான சி.பி.எண்.90/2025 ல் கண்ட அயிட்டம் 1) 180 ml அளவுள்ள Courrier Napoleon Brandy - 18 Nos, அயிட்டம் 2) 180 ML அளவுள்ள Biscuit Brandy -32 No's மதுபாட்டில்கள் ஆகியவை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. அயிட்டம் 3) Tyota Glanza G CNG bearing Reg.No. TN-31-CQ-5409 என்ற வாகனத்தை அதன் உரிமையாளர் திரு.பாபு த.பெ சுந்தமூர்த்தி , நெ.11, கணபதி நகர், இரண்டாவது தெரு, கொங்கைகண்டான், நெய்வேலி என்பவர் இந்நீதிமன்ற Crl.M.P.No.7457/2025, dated 10.06.2025 அன்று இடைக்காலப்பொறுப்பில் பெற்றுச்சென்றுள்ளார். மேற்படி வாகனத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு உரிமையாளரே நிரந்தர உடைமையாக வைத்துக்கொள்ளவும், வழக்கின் உரிமையாளர் எழுதிகொடுத்த பிணை பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 27.07.2026-ந் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR Date: 2026.07.27 18:21:26 +0530

நீதித்துறை நடுவர் எண்.2

கடலூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

அசா.1 திரு. சிலம்பரசன் (தலைமை காவலர்)

அசா.2 திரு. ராஜேஷ் (தலைமை காவலர்)

அசா.3 திரு. வெங்கடேசன் (தலைமைக்காவலர்)

அசா.4 திரு.பாலாஜி( ஆய்வாளர்)

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**

அசாஆ.1 02.05.2025 1 வது கைப்பற்றுதல் மகசரில் உள்ள அசா.1 னின் 1 வது கையொப்பம்

அசாஆ.2 02.05.2025 1 வது கைப்பற்றுதல் மகசரில் உள்ள அசா.2 னின் 2 வது கையொப்பம்

அசாஆ.3 02.05.2025 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அசா.3 னின் 1 வது கையொப்பம்.

அசா.ஆ.4 02.05.2025 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி

அசா.ஆ.5 02.05.2025 2 வது கைப்பற்றுதல் மகசரில் உள்ள அசா.3 னின் 2 வது கையொப்பம்.

அசா.ஆ.6 02.05.2025 முதல் தகவல் அறிக்கை

அசா.ஆ.7 02.05.2025 கைப்பற்றுதல் மகசா் (1)

அசா.ஆ.8 02.05.2025 கைப்பற்றுதல் மகசா் (2)

அசா.ஆ.9 02.05.2025 பிரிவு மாற்று அறிக்கை

அசா.ஆ.10 02.05.2025 படிவம் 91

**அரசு தரப்பு சான்றுபொருள் –**

சா.பொ.1 -அயிட்டம் 1) 180 ml அளவுள்ள Courrier Napoleon Brandy – 18 Nos, அயிட்டம் 2) 180 ML அளவுள்ள Biscuit Brandy –32 No's

சா.பொ.2 Tyota Glanza G CNG bearing Reg.No. TN-31-CQ-5409 என்ற வாகனத்தின் புகைப்படம்.

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள் – இல்லை**

BUVANESHKUMAR Digitally signed by BUVANESHKUMAR Date: 2026.07.27 18:21:32 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
கடலூர்.

**குறிப்பு**

1. விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
2. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை

**நகல்**

1. மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர், கடலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**C.C No.**919/2025

நாள்: 27.07.2026

**தீர்ப்புரை**

எதிரி ஆஜர். திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு பகரப்பட்டது. முடிவில், அரசு தரப்பில் எதிரி மீதானக் குற்றச்சாட்டு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாகவும், சான்றாவணங்கள் மூலமாகவும் சந்தேகமற நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு கண்டு இவ்வழக்கின் எதிரியை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 4(1)(C) 4 (1) (A) & 14 A of TNP Amendment Act பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கு சொத்தான சி.பி.எண்.90/2025ல் கண்ட அயிட்டம் 1) 180 ml அளவுள்ள Courrier Napoleon Brandy – 18 Nos, அயிட்டம் 2) 180 ML அளவுள்ள Biscuit Brandy –32 No's மதுபாட்டில்கள் ஆகியவை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. அயிட்டம் 3) Tyota Glanza G CNG bearing Reg.No. TN-31-CQ-5409 என்ற வாகனத்தை அதன் உரிமையாளர் திரு.பாபு த.பெ சுந்தமூர்த்தி , நெ.11, கணபதி நகர், இரண்டாவது தெரு, கொங்கைகண்டான், நெய்வேலி என்பவர் இந்நீதிமன்ற Crl.M.P.No.7457/2025, dated 10.06.2025 அன்று இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேற்படி வாகனத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு உரிமையாளரே நிரந்தர உடைமையாக வைத்துக்கொள்ளவும், வழக்கின் உரிமையாளர் எழுதிகொடுத்த பிணை பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

நீதித்துறை நடுவர் எண்.2 கடலூர்.

**S.T.C. No.**55/2014
**Dated**: 06.12.2023

**Notes Order**:

When perusal of notes paper and deposition on 18.02.2015 L.W1 examined as P.W.1, Ex.P.1 marked through P.W.1. Ex.P2 and Ex.P3 marked through P.W.3 and P.W.4. Subcequently P.W.5 examined on 08.05.2015 and inadvertently typed in deposition Ex.P2 to Ex.P4 marked through P.W.5. Instead of Ex.P4 to P6 marked through P.W.5. Documents seald by me and rectified the mistake by way of

notes order.

J.M.II (FAC)
Cud